**வேலூர், மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.2845/ஆ1/2023 நாள். 17.08.2023.**

| | |
|---|---|
| பொருள்– | தமிழ்நாடு மேல்நிலைக்கல்விப்பணி – 01.01.2023ல் உள்ளவாறு அரசு/நகராட்சி மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் பதவி உயர்விற்குத் தகுதி வாய்ந்த முதுகலைப் பாட ஆசிரியர்கள் / முதுகலை மொழி ஆசிரியர்கள் / உடற்கல்வி இயக்குநர் (நிலை – 1)/ அரசு உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்கள் – தேர்ந்தோர் பட்டியல் தயார் செய்து கருத்துருக்கள் பெறப்பட்டு உத்தேச பெயர் பட்டியல் வெளியிடப்பட்டமை – மேல்முறையீடுகள் பெறப்பட்டு – திருத்திய முன்னுரிமைப்பட்டியல் வெளியிடப்பட்டது – இறுதியான சுழற்சி பட்டியல் வெளியிடப்பட்டது – கலந்தாய்வு கலந்துகொள்ள தெரிவித்தல் – தொடர்பாக. |
| பார்வை– | தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.39620/W1/இ1/2023 நாள். 14.08.2023 மற்றும் 16.08.2023. |

#####

பார்வையியில் காணும் 14.08.2023 நாளிட்ட செயல்முறைகளின்படி 01.01.2023ல் உள்ளவாறு அரசு/நகராட்சி மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் பதவி உயர்விற்குத் தகுதி வாய்ந்த முதுகலைப் பாட ஆசிரியர்கள் / முதுகலை மொழி ஆசிரியர்கள் / உடற்கல்வி இயக்குநர் (நிலை –1)/ அரசு உயர்நிலைப்பள்ளித்தலைமையாசிரியர்களின் இறுதியான சுழற்சி பட்டியல் வெளியிடப்பட்டது.

எனவே 16.08.2023 நாளிட்ட செயல்முறைகளின்படி மேற்கண்ட அரசு மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் பதவி உயர்வு 18,19 மற்றும் 20.08.2023 நாட்களில் EMIS இணையதள வழியாக வேலூர், மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலகத்தில் 18.08.2023 அன்று 1 முதல் 300 நபர்களுக்கும் 19.08.2023 அன்று 301 முதல் 600 நபர்களுக்கும் எஞ்சியவர்களுக்கு 20.08.2023 அன்றும் கலந்தாய்வு நடைபெறவுள்ளதால் இணைப்பில் கண்டுள்ள சுழற்சிப் பட்டியலில் இடம்பெற்றுள்ள அனைத்து அரசு மேல்நிலைப்பள்ளிகளில் பணிபுரியும் தகுதிவாய்ந்த முதுகலை ஆசிரியர்கள் மற்றும் உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்கள் கலந்தாய்வில் கலந்துகொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு– பார்வையில் காணும் 14.08.2023 நாளிட்ட செயல்முறைகள்.

முதன்மைக்கல்வி அலுவலர்,
வேலூர்–9.

17.8.2023

பெறுநர்

அரசு உயர்/மேல்நிலைப்பள்ளி,
தலைமையாசிரியர்கள். வேலூர் மாவட்டம்.

நகல்– மாவட்டக்கல்வி அலுவலர்(இநிக) வேலூர் அவர்களுக்கு தொடர் நடவடிக்கைக்காக அனுப்பப்படுகிறது.